20.06.2025 Hmop .15 /2022 எ.ம.சா.1 ஜெயசுதா

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் வேலை எதுவும் செய்யவில்லை. என் பெற்றோர்கள் என்ன வேலை செய்கிறார்கள் என்றால் விவசாயம் செய்கிறார்கள். எனக்கு திருமண தேதி 6.2.2012 ம் தேதியாகும். திருமணத்தின் போது எனக்கு சீர்வரிசை,நகை பண்டபாத்திரம் கொடுக்கப்பட்டதா என்றால் கொடுக்கப்பட்டது. 10 பவுன் நகை போடப்பட்டது. ரூ.50 ஆயிரம் ரொக்கம் கொடுக்கப்பட்டது. ஒரு லட்சத்திற்கு மேல் சீர்வரிசை பொருட்கள் கொடுக்கப்பட்டது. அதற்கான பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. என் நிரூபண வாக்குமூலத்தை நான் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னென்ன பொருட்கள் வாங்கினேன் என்பதற்கு புகைப்படம் மற்றும் ரசீது தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். என் கணவர் வெளிநாட்டில் வேலை செய்தார். என் கணவர் வெளிநாட்டில் வேலை பார்த்போது என் வங்கி கணக்கில் தான் பணம் அனுப்புவார் என்றால் செலவிற்கு மட்டும் ரு.5 ஆயிரம் அனுப்புவார். என் மருத்துவ செலவு என் கணவர் செய்துள்ளார் என்றால் சரிதான். நகையை எந்த வங்கியில் எவ்வளவு ரூபாய்க்கு அடமானம் வைத்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் என் கணவரின் தங்கை பெயரில் அடமானம் வைத்துள்ளார். என் கணவரின் தங்கையின் பெயரில் அடமானம் வைத்தற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 26.10.2021 ம் தேதி நான் கடையநல்லூர் காவல்நிலையத்தில் எதற்காக புகார் கொடுத்தேன் என்றால் நகைகளை வட்டி கட்டாதால் நகையை பற்றி என் கணவரிடம் கேட்டபோது பிரச்சனை ஏற்பட்டதால் புகார் கொடுத்தேன். காவல்நிலையத்தில் ஒரு மாதம் அவகாசம் கேட்டார். அதன்பிறகு தராத காரணத்தினால் கடையநல்லூர் போலீசார் மகளிர் காவல்நிலையம் செல்லுங்கள்

என்று சொன்னார்கள். 18.12.21 அன்று நான் குற்றாலம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. என் நிரூபண வாக்குமூலத்தில் நான் குற்றாலம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் நான் குற்றாலம் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. எனக்கு இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்து இறந்து போய்விட்டது. மேற்படி விபரத்தை எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன்.

(மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

(ஒம்)ஏ.பிஸ்மிதா
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.